Q.L-004

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| **Name of the Test:** | Subordinate Accounts Services Examinations - Paper - I (Audit of Local Bodies / Universities and other Auditable Institutions(With Books) | 102 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour

Maximum Marks: 100

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

QC-004

1. According to Tamilnadu Local Fund Audit Act 2014, which of the following section deals with Audit of Institutions not included in the Schedule,
தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கைச் சட்டம் 2014 ன் எந்த பிரிவு பட்டியலில் இல்லாத நிறுவனங்களின் தணிக்கையைப் பற்றி கூறுகின்றது

(A) Section 5
பிரிவு 5

(B) Section 4
பிரிவு 4

(C) Section 6
பிரிவு 6

(D) Section 7
பிரிவு 7

2. According to Tamilnadu Local Fund Audit Act 2014, persons not disobeying and willfully neglecting to produce records for audit will be punishable with a fine from Rs. 1000 and to be extended to the amount Rs.
தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கைச் சட்டம் 2014 ன் படி தணிக்கைக்கு ஆவணங்கள் முன்னிலைப்படுத்துவதில் நோக்கின் அடிப்படையில் காலதாமதம் செய்வது மற்றும் ஆவணங்கள் தரப்படாத நிகழ்வில் ரூ. 1000 முதல் ———————— வரை தண்டனைக்குரியதாகும்.

(A) Rs. 10,000
ரூ. 10,000

(B) Rs. 8,000
ரூ. 8,000

(C) Rs. 4,000
ரூ. 4,000

(D) Rs. 5,000
ரூ. 5,000

3. Vouchers including Bank Payment Vouchers of month of August, 2020 should be produced to the office of Assistant Director, Local fund audit by a Town Panchayat on or before.
ஆகஸ்ட், 2020 மாதத்தின் கொடுப்புச் சீட்டுக்கள் உட்பட அனைத்து செலவுச் சீட்டுக்களும் பேரூராட்சியால் உள்ளாட்சி நிதித் தணிக்கை அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டியது

(A) 25th of August, 2020
2020, ஆகஸ்ட், 25 ஆம் தேதிக்குள்

(B) 31st of August, 2020
2020, ஆகஸ்ட், 31 ஆம் தேதிக்குள்

(C) 25th of September, 2020
2020, செப்டம்பர், 25 ஆம் தேதிக்குள்

(D) 30th of September, 2020
2020, செப்டம்பர், 30 ஆம் தேதிக்குள்

4. Quarterly audit program shall be prepared for each quarter, based on the annual audit plan by the concerned authorities and sent to the authority for approval before the 15th of the month preceding to the commencement of the quarter. The Director or his subordinate officers shall approve the quarterly audit program within __________ days from the date of receipt.
ஒவ்வொரு காலாண்டு பணித்திட்டமும் காலாண்டு துவக்கப்படும் மாதத்தின் முந்தைய மாதத்தின் 15 ஆம் நாளுக்குள் தயாரித்தனுப்பிட வேண்டும், இப்பணித்திட்டமானது __________ நாளுக்குள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

(A) 10 Days
10 நாட்களுக்குள்

(B) 15 Days
15 நாட்களுக்குள்

(C) 05 Days
05 நாட்களுக்குள்

(D) 03 Days
03 நாட்களுக்குள்

5. According to Tamilnadu Local Fund Audit Act 2014, an auditor while on local audit of Town Panchayats and Municipalities shall check the following up to the date of completion of audit
தமிழ்நாடு உள்ளாட்சி நிதி சட்டம் 2014 ன் படி பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கையின் முடிவில் கீழ்க்காண் எவ்வினங்களை தணிக்கை முடியும் நாள் வரை சரிபாக்கலாம்

1. check the details of collection
அனைத்து வரவினங்களையும் சரிபார்க்க வேண்டும்

2. remittance of collection
அனைத்து வரவினங்களும் செலுத்தப்படுதலை சரிபார்க்க வேண்டும்

3. withdrawals from accounts
அனைத்து எடுப்புகளையும் சரிபார்க்க வேண்டும்

4. cash balance as on the date of completion of audit
தணிக்கை முடியும் நாளில் உள்ள கையிருப்பு தொகையினை சரிபார்க்க வேண்டும்

(A) 1, 2 and 3 are correct
1, 2 மற்றும் 3 சரி

(B) 1, 2 and 4 are correct
1, 2 மற்றும் 4 சரி

(C) 1, 2, 3 and 4 are correct
1, 2, 3 மற்றும் 4 சரி

(D) 1, 3 and 4 are correct
1, 3 மற்றும் 4 சரி

6. According to TN Local Fund Audit 2014, special letters on the audit report of a Municipal Corporation issued by a Deputy Director of Local Fund Audit Department is being issued by
ஒரு மாநகராட்சியின் தணிக்கை அறிக்கையின் மீது யாரால் சிறப்பு கடிதம் வெளியிடப்பட வேண்டும்

(A) The Deputy Director who issued the Audit Report
மாநகராட்சி தணிக்கையினை துணை இயக்குநரால்

(B) Regional Joint Director of the Region of Local Fund Audit
உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை மண்டல இணை இயக்குநரால்

(C) Director of Local fund Audit
உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை இயக்குநரால்

(D) Joint Director in the Directorate, Local Fund Audit, Chennai
உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை இயக்குநராக இணை இயக்குநர்

7. According to Local Fund Audit Act, 2014, Rules framed there under 2016, Section 15(10), If any audit objection raised in the Annual Audit Report of a Municipal Corporation is found to be settled incorrectly and due to misinterpretation of rules or by persons not competent and by the persons not authorised to settle the objections, such objections shall be re-opened by whom?
தமிழ்நாடு உள்ளாட்சி நிதி சட்டம், 2014, விதிகள், 2016 15(10) ன் படி ஒரு மாநகராட்சியின் தணிக்கை அறிக்கையின் தணிக்கைத் தடை பத்தியானது விதிகளுக்கு புறம்பாக நீக்கப்பட்டதாயின் அதனை ரத்து செய்யும் அதிகாரம் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

1. The officer authorised for settlement, the Deputy Director of Local Fund Audit Department of the concerned Municipal Corporation as he was authorized to settle
தணிக்கை தடை நீக்கும் அதிகாரம் பெற்ற அந்த மாநகராட்சியின் துணை இயக்குநர்

2. Immediate superior, the Regional Joint Director of Local Fund Audit
உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை மண்டல இணை இயக்குநர்

3. The Director of Local Fund Audit Department
உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநர்

(A) 1, 2 and 3 are correct
1, 2 மற்றும் 3 சரி

(B) 2 and 3 are correct
2 மற்றும் 3 சரி

(C) 3 only is correct
3 மட்டும்

(D) 1 and 3 are correct
1 மற்றும் 3 சரி

8. The audit fee for municipality is
நகராட்சியின் தணிக்கை கட்டணமானது

(A) Actual cost of audit
தணிக்கைக்குரிய உண்மைச் செலவினம்

(B) 50% of actual cost of audit
உண்மை செலவினத்தில் 50%

(C) 25% of actual cost of audit
உண்மை செலவினத்தில் 25%

(D) Free of cost
தணிக்கைக் கட்டணம் இல்லை

9. According to which Rule derived under TN Local Fund Audit Act, 2014 and Rules framed there under, 2016, The Director shall also initiate disciplinary action against the auditors or the authority reviewing or accepting the audit report, for non compliance of audit or non submission of audit report within the period?
தமிழ்நாடு உள்ளாட்சி நிதி சட்டம் 2014, விதிகள் 2016 ன் எந்த விதிகளின் படி தணிக்கை அறிக்கை சமர்ப்பிக்காத மற்றும் உரிய விதிகளின் படி தணிக்கை மேற்கொள்ளாத தணிக்கையாளர்கள் மீது துறை இயக்குநரால் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும்?

(A) Rule 15(6)
(B) Rule 16(5)
(C) Rule 15(5)
(D) Rule 16(6)

10. According to Rule 9(b)(ii) derived under TN Local Fund Audit Act, 2014 and Rules framed there under, 2016, in cases where man days for audit is less than fifteen days the penalty imposed shall be minimum of ———— rupees only.
தமிழ்நாடு உள்ளாட்சிநிதி சட்டம் 2014, விதிகள் 2016 ன் விதி 9(b)(ii) ன் படி பதினைந்து நாட்களுக்குள் தணிக்கைக்குரிய மனித நாட்கள் உள்ள இனங்களில் விதிக்கப்படும் குறைந்த பட்ச அபராத தொகை யாது?

(A) Rs. 1000 only
ரூபாய் 1000 மட்டும்

(B) Rs. 5000 only
ரூபாய் 5000 மட்டும்

(C) Rs. 3000 only
ரூபாய் 3000 மட்டும்

(D) Rs. 2,000 only
ரூபாய் 2000 மட்டும்

11. According to Tamilnadu Local Fund audit Act 2014, Choose the right choice / choices in the calculation of cost of audit as Audit Fees
தமிழ்நாடு உள்ளாட்சி நிதி சட்டம் 2014, ன் படி தணிக்கைக் கட்டணம் கணக்கிடுவதில் கீழ்க்காண் சரியான கூற்றுக்களை தேர்ந்தெடுக்க.

1. Raja Veda Path Salai, Kumbakonam – 25% of standard cost.
கும்பகோணம் ராஜ பாட சாலை தணிக்கை – நிலையான செலவினத்தில் 25%
2. Local Library Authority of Tanjavur District –100% of actual cost
தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தணிக்கை – உண்மை செலவினத்தில் 100%
3. Municipality of Kumbakonam – 50% of actual cost
கும்பகோணம் நகராட்சி தணிக்கை – உண்மை செலவினத்தில் 50%

(A) 1 and 2 are correct
1 மற்றும் 2 சரி
(B) 1, 2 and 3 are correct
1, 2 மற்றும் 3 சரி
(C) 2 and 3 are correct
2 மற்றும் 3 சரி
(D) 1 and 3 are correct
1 மற்றும் 3 சரி

12. As per G.D.Ms No. 295 Labour and Employment Dept. Dated 17.12.2013, the percentage of amount deducted from the estimate of the work is
அ.ஆ எண் 295 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 17.12.2013 ன்படி, வேலையின் மதிப்பீட்டில் தொழிலாளர் நலநிதிக்கு பிடித்தம் செய்ய வேண்டிய தொகை

(A) 1%
(B) 3%
(C) 0.1%
(D) 0.3%

13. According to Tamilnadu Local Fund audit Act 2014, an executive authority shall rectify the defects and furnish replies to the audit slips within ———— days.
தமிழ்நாடு உள்ளாட்சி நிதி சட்டம் 2014,ன் படி தணிக்கையாளரால் வெளியிடப்பட்ட தணிக்கைச் சீட்டுகளுக்கு நிர்வாக அலுவலர்களால் எத்தனை நாளுக்குள் பதில் தயாரித்தளிக்கப்பட வேண்டும்.

(A) Three days
மூன்று நாட்களுக்குள்
(B) Five days
ஐந்து நாட்களுக்குள்
(C) Ten days
பத்து நாட்களுக்குள்
(D) Fifteen days
பதினைந்து நாட்களுக்குள்

14. The Tamilnadu Local Fund audit Act 2014, Rules framed thereunder, 2016 came into force on
தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 விதிகள் – 2016 எந்த நாள் செயலுக்கு வருகிறது ?

(A) As on 24.08.2016
24.08.2016 அன்று

(B) As on 24.08.2015
24.08.2015 அன்று

(C) As on 24.08.2014
24.08.2014 அன்று

(D) As on 24.08.2017
24.08.2017 அன்று

15. Choose the right option / options,
Vide Rule 23 Tamilnadu Local Fund Act, 2014 and Rules framed there under, 2016
தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014, விதிகள் – 2016 ன் படி சரியான கூற்று/கூற்றுகளை தேர்ந்தெடுக்க.

I. The Director shall issue manuals on the audit of local authorities or local funds once in five years.
ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை உள்ளாட்சி நிதித் தணிக்கை நடைமுறை நூல் இயக்குநரால் வெளியிடப்பட வேண்டும்

II. The Director shall also issue corrections and amendments to and re-issue audit manuals once in two years when found necessary with the permission of the Government.
வெளியிடப்பட்ட நடைமுறை நூலில் திருத்தம் ஏதுமிருப்பின், திருத்தப்பட்ட நடைமுறை நூல் மாநில அரசின் அனுமதியுடன் இரண்டாண்டுக்குள் வெளியிடப்பட்ட வேண்டும்

(A) I and II are Correct
I மற்றும் II சரி

(B) I only is correct
I மட்டும் சரி

(C) II only is correct
II மட்டும் சரி

(D) None of these
இவைகளில் எதுவுமில்லை

16. What is the ceiling of expenditure for conducts of sports in District Panchayat
மாவட்ட ஊராட்சிக்கு விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட தொகை

(A) Rs. 20,000/-
ரூ. 20,000/–

(B) Rs. 25,000/-
ரூ. 25,000/–

(C) Rs. 10,000/-
ரூ. 10,000/–

(D) Rs. 5,000/-
ரூ. 5,000/–

17. According to TN Local Fund Audit, 2014 and rules framed there under, 2016 regarding draft audit reports, Part 6 containing the details of
தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014, விதிகள் – 2016 ன் படி தணிக்கை அறிக்கைகளில் பத்திகளை அமைத்தலில் பகுதி 6 குறித்து சரியான கூற்று/கூற்றுகளை தேர்ந்தெடுக்க.

I. Observations and objections relating to Provident fund
சேமநலநிதி குறித்த தணிக்கைத் தடைகள் வரைதல்

II. Observations and objections relating to Contributory pension scheme
பங்களிப்பு ஓய்வூதிய நிதி குறித்த தணிக்கைத் தடைகள் வரைதல்

III. Observations and objections relating to execution of schemes
திட்ட நிதிகளில் செயல்பாடு நிதி குறித்த தணிக்கைத் தடைகள் வரைதல்

(A) I, II and III are correct
I, II மற்றும் III சரி

(B) I and III are correct
I மற்றும் III சரி

(C) I and II are correct
I மற்றும் II சரி

(D) II and III are correct
II மற்றும் III சரி

18. The special letters shall be issued to the non-officials of any local authority, provided that special letters to officers belonging to Indian Administrative Service cadre shall be issued by
தணிக்கை அறிக்கையின் மீது சிறப்புக் கடிதம் வெளியிடும்போது தொடர்புடைய நிருவாக அலுவலர் இந்திய ஆட்சிப் பணி பதவித் தரத்தை சார்ந்தவர் எனில் கீழ்க்காண் எந்நிலை அலுவலரால் சிறப்புக் கடிதம் வெளியிடப்பட வேண்டும்

(A) The Director of Local Fund Audit Department
உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநரால்

(B) The Regional Joint Director of Local Fund Audit Department
உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை மண்டல இணை இயக்குநரால்

(C) The Secretary to Concerned Department
தொடர்புடைய துறையின் அரசுத் துறை செயலரால்

(D) The authority concerned on behalf of the Director of Local Fund Audit Department
உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால்

19. Current year total depreciation agree with code no
தேய்மானத்தின் கூடுதலானது. எந்த குறியீட்டு எண்ணோடு இணக்கமாக இருப்பதை சரிபார்க்கப்பட வேண்டும்?

(A) 2048

(B) 2028

(C) 2039

(D) 2038

20. What is the percentage of Village Panchayats audit in a financial year by the director of Local fund audit?

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை இயக்குனரால், கிராம ஊராட்சிகளின் தணிக்கை ஆண்டுக்கு எத்தனை சதவீதம் மேற்கொள்ளப்படுகிறது?

(A) 100%
(B) 50%
(C) 40%
(D) 20%

21. Choose the correct sequence according to Tamilnadu Local Fund Audit Act, 2014 and Rules framed there under, 2016.

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014, விதிகள் – 2016 ன் படி தணிக்கை அறிக்கைகளின் மீது திருத்தம் வெளியிடும் நிகழ்வுகளில் சரியான கூற்று/கூற்றுகளை தேர்ந்தெடுக்க.

| Forms | | Show cause/summons |
|---|---|---|
| (a) Form B<br>படிவம் B | 1. | Show Cause Notice to the executive authority subject to default in presentation of accounts<br>கணக்குகள் அளிக்கத்தவறிய தொடர்புடைய நிருவாக அதிகாரியை காரணம் கேட்கும் குறிப்பாணை அனுப்புவது |
| (b) Form C<br>படிவம் C | 2. | Summon to the individual concerned subject to produce or cause to produce the records within three days in connection with the accounts.<br>சம்பந்தப்பட்ட தனியர்மீதான இணக்கமாக நடக்கத்தவறியமைக்கு மூன்று நாட்களுக்குள் அழைப்பாணை அனுப்புவது |
| (c) Form D<br>படிவம் D | 3. | Summon to the individual concerned subject to appear in person in connection with the accounts.<br>சம்பந்தப்பட்ட தனியர்மீதான இணக்கமாக நடக்கத்தவறியமைக்கு ஆஜராகவில்லை எனில் அழைப்பாணை அனுப்புவது |
| (d) Form E<br>படிவம் E | 4. | Show cause Notice to the individual concerned to appear in person to answer the audit enquiries.<br>சம்பந்தப்பட்ட தனியர்மீதான இணக்கமாக நடக்கத்தவறியமைக்கு அழைப்பாணைக்கு ஏற்ப இணக்கமாக செயல்படாமைக்கு நேரில் ஆஜராகக் கோரி அனுப்புவது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 4 | 3 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

22. The audit notes and audit reports shall be treated as ―――――― closure until settlement of all the objections in the audit notes and reports.
அனைத்து மறுப்புரைகளும் தீர்வு செய்யப்படும் வரையில், வெளியிடப்பட்ட தணிக்கை அறிக்கைகள் ―――――― பதிவுருக்களாகும்.

(A) D-Dis
பத்தாண்டு முடிவு

(B) L-Dis
ஓராண்டு முடிவு

(C) R-Dis
நிரந்தர முடிவு

(D) K-Dis
மூன்றாண்டு முடிவு

23. There shall be ―――――― separate parts in the audit reports.
தணிக்கை அறிக்கையில் எத்தனை தனியான பகுதிகள் இருக்கும்?

(A) 8 Parts
8 பகுதிகள்

(B) 7 Parts
7 பகுதிகள்

(C) 6 Parts
6 பகுதிகள்

(D) 5 Parts
5 பகுதிகள்

24. Choose the right choice/choices about certificate of annual accounts of an institution while on audit
ஆண்டு தணிக்கையின்போது ஆண்டுக் கணக்குகளின் சரித்தன்மையை சரிபார்த்து இயக்குநர் அளிக்கும் சான்றுகள் குறித்து சரியான இணை/இணைகளை தேர்ந்தெடுக்க.

1. Qualified Certificate – If the auditor is satisfied in all material respects of the annual accounts and found that accounts have been compiled properly
குறையின்மைச் சான்றிதழ் – அனைத்து முக்கியமான வகைகளிலும் தணிக்கையாளர் மன நிறைவடைந்தால் அளிக்கும் சான்றாகும்

2. Unqualified certificate – it was found out that there are serious mistakes in the annual accounts such as uncertainly with the amounts
குறையுள்ளது என்பதற்கான சான்றிதழ் – தொகைகளில் நிச்சயமற்ற தன்மை மற்றும் ஏனைய பொருத்தமான பதிவுருக்கள் பொருந்தாமை

3. Disclaimer certificate – there is no possiblity of the audit to give a clear opinion about the annual accounts, for want of any details, or due to non-closure or non-tallying of subsidiary records.
மறுப்புத்துறப்புச் சான்றிதழ் – தணிக்கையாளர் மன நிறைவின்றி சான்றளித்தல், விவரங்கள் இல்லாமை மற்றும் பதிவேடுகள் மற்றும் துணைப் பதிவேடுகள் முடிக்கப்படாமை

4. Adverse Certificate – If the auditor cannot agree with the fundamental aspects of the annual accounts
முரண் தெரிவிப்புச் சான்றிதழ் – ஆண்டுக் கணக்கின் அடிப்படை அம்சங்களை தணிக்கையாளர் ஏற்றுக் கொள்ளாமை

(A) 1, 2 and 4 are correct
1, 2 மற்றும் 4 சரி

(B) 1, 2 and 3 are correct
1, 2 மற்றும் 3 சரி

(C) 1, 2, 3 and 4 are correct
1, 2, 3 மற்றும் 4 சரி

(D) 2, 3 and 4 are correct
2, 3 மற்றும் 4 சரி

25. The Director shall condone any payments made by a local authority or local fund up to a sum not exceeding rupees ten thousand, according to ———— section/sub-section of Tamilnadu Local fund Act, 2014 and Rules framed there under.
உள்ளாட்சி நிதி 2014 மற்றும் உள்ளாட்சி அமைப்பால் பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத தொகை இயக்குநர் பொருட்படுத்தாது விடலாம் என்றவாறு அதிகாரம் அளிக்கும், விதி மற்றும் துணை விதி யாது?

(A) Sub-section (4) of section 15 of the Act
விதி 15 க்குட்பட்ட துணை விதி 4

(B) Sub-section (4) of section 13 of the Act
விதி 13 க்குட்பட்ட துணை விதி 4

(C) Sub-section (4) of section 6 of the Act
விதி 6 க்குட்பட்ட துணை விதி 4

(D) Sub-section (4) of section 16 of the Act
விதி 16 க்குட்பட்ட துணை விதி 4

26. Audit fees in Local Planning Authority is
உள்ளூர் திட்டக் குழுவிற்கான தணிக்கைக் கட்டண கணக்கீட்டில் சரியானதை தேர்ந்தெடுக்க

(A) 0.75% of Gross Receipts
மொத்த வரவில் 0.75%

(B) 2% of Gross Receipts
மொத்த வரவில் 2%

(C) 1% of Gross Receipts
மொத்த வரவில் 1%

(D) Free of Cost
கட்டணம் எதுவுமில்லை

27. The cost of audit of the accounts of any local authority or local fund is payable under section 17 of the TNLF Act 2014, The rate of audit fees payable and the concerned authority on whom the audit fees is leviable shall be payable within the period of ———— from the date of receipt of the audit report or demand from the Director.
தமிழ்நாடு உள்ளாட்சி நிதி சட்டம் 2014, பிரிவு எண். 17 ன் படி தணிக்கை மேற்கொண்டதற்கான தணிக்கைக் கட்டணத்தை அந்தந்த நிறுவனத்திடமிருந்து விதிக்கப்பட்ட நாளிலிருந்து ———— காலத்திற்குள் அந்த நிறுவனம் செலுத்த வேண்டும்.

(A) One year
ஓராண்டுக்குள்

(B) Two years
இரண்டாண்டுக்குள்

(C) Three years
மூன்றாண்டுக்குள்

(D) Six months
ஆறு மாதங்களுக்குள்

28. If Annual Accounts of a Municipality were produced to audit in complete shape as on 10th August of the year 2020, then the audit of the Municipality should be completed on or before ———— as per section 10(1) of TNLF Act 2014.
ஒரு நகராட்சியால் ஆண்டுக்கணக்குகள் 2020, ஆகஸ்ட் 10 அன்று முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படும் வண்ணம் சமர்ப்பிக்கப்பட்டதாயின் உள்ளாட்சி நிதிச் சட்டம் 2014 பிரிவு 10(1) ன் படிதணிக்கை முடிக்கப்பட வேண்டிய காலவறையரை யாது?

(A) On or before 10th December, 2020
2020 ஆம் ஆண்டு டிசம்பர் 10 க்குள்

(B) On or before 10th February, 2021
2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 10 க்குள்

(C) On or before 31st December, 2020
2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 க்குள்

(D) On or before 31st March, 2021
2021 ஆம் ஆண்டு மார்ச் 31 க்குள்

29. TDS is to be deducted at the rate of ———— percent on payments made to the supplier of taxable goods and / or services as GST, where the total value of such supply (Not Invoice Value), under an individual contract, two lakh and thirty thousand rupees.
விநியோகிப்பாளருக்கு வழங்கப்படும் மொத்த தொகையில் ரூ. 2 லட்சத்து முப்பதாயிரம் ரூபாய் எனில், அந்த சரக்கு மற்றும் சேவை வரி எவ்வளவு விழுக்காடு பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

(A) 2%
2 விழுக்காடு

(B) 1%
1 விழுக்காடு

(C) 10%
10 விழுக்காடு

(D) None of these
எதுவுமில்லை

30. Choose the right choice / choices about completion of audit of an institution which do not produce annual accounts in time.
ஆண்டுக் கணக்குகள் முழுமையாக சமர்ப்பிக்காத நிறுவனங்களைப் பொறுத்தவரை சரியான இணை/இணைகளைத் தேர்ந்தெடுக்க.

I. The Director shall arrange to complete the audit of local authority and local fund, of which the annual accounts relating to a financial year were not prepared and presented to audit within prescribed time limit.
ஆண்டுக் கணக்குகள் தயாரிக்கப்படாத மற்றும் குறிப்பிட்ட காலவரைக்குள் அளிக்காத உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கையினை மேற்கொள்வதற்கு இயக்குநர் நடவடிக்கை மேற்கொள்வார்.

II. If the audit could not be completed within a period of two years from the completion of the financial year, he shall report the fact in the annual report being presented to the Legislative Assembly
நிதியாண்டு முடிந்ததிலிருந்து இரண்டாண்டு கால அளவுக்குள் தணிக்கையினை நிறைவு செய்ய இயலவில்லையெனில், சட்ட சபையில் தாக்கல் செய்கின்ற ஆண்டு அறிக்கையில் அது குறித்த தகவலை அவர் தெரிவிப்பார்

(A) I only correct
I மட்டும் சரி

(B) II only correct
II மட்டும் சரி

(C) I and II are correct
I மற்றும் II சரி

(D) None of these
இவை எதுவுமில்லை

31. What is the amount of subscription deducted from monthly pension of a pensioner of Panchayat Union towards medical reimbursement?
ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தில் மருத்துவச் செலவினை மீள் பெற்றுத்தருவதற்கான திட்டத்திற்கான சந்தா தொகை யாது?

(A) Rs. 100 per month
மாதாந்திரம் ரூ. 100

(B) Rs. 150 per month
மாதாந்திரம் ரூ. 150

(C) Rs. 80 per month
மாதாந்திரம் ரூ. 80

(D) Rs. 230 per month
மாதாந்திரம் ரூ. 230

32. Choose the right choice / choices.
சரியான கூற்று/கூற்றுகளை தேர்ந்தெடுக்க,

I. As per G.O.Ms No. 189 Finance (Pension) dated 07.06.2013, pensioners who retired from Municipalities are being sanctioned Rs. 35,000/- as benefit under Family Security Fund extended.,
நகராட்சி ஓய்வூதியர்களுக்கு அரசு ஆணை எண். 189 நிதி (ஓய்வூதியம்) நாள். 07.06.2013–இன் படி குடும்ப பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ. 35,000/– வழங்கப்படுகிறது.

II. Pensioners who were retired from Panchayat Union are being sanctioned Rs. 1,00,000/- towards medical reimbursement.,
ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியர்களின் மருத்துவ செலவினை மீள பெற்றுத்தரும் திட்டத்தின் கீழ் ஓய்வூதியருக்கு/குடும்ப ஓய்வூதியருக்கு ரூ.1,00,000/– வரை மருத்துவ செலவினங்கள் விதிகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது.

(A) I only is correct
I மட்டும் சரி

(B) II only is correct
II மட்டும் சரி

(C) I and II are correct
I மற்றும் II சரி

(D) None of these
இவை எதுவுமில்லை

33. Choose the correct sequence / sequences of options about District Level High Level Committee.
தணிக்கைத் தடைகள் தீர்வு குறித்து நடத்தப்படும் மாவட்ட அளவிலான உயர் மட்டக் குழுவைப்பொறுத்து சரியான இணை/இணைகளைத் தேர்க.

I. Regional Joint Director, Local Fund Audit is a member in High Level Committee constituted for settlement of audit objection in respect of Panchayat Union.
ஊராட்சி ஒன்றிய தணிக்கைத் தடைகள் நிவர்த்தித்தல் குறித்த மாவட்ட அளவிலான உயர் மட்ட குழுவில் உள்ளாட்சி நிதித் தணிக்கை, மண்டல இணை இயக்குநர் ஒரு உறுப்பினர் ஆவார்

II. Regional Joint Director, Local Fund Audit is a member in High Level Committee constituted for settlement of audit objection in respect of Town Panchayats
பேரூராட்சிகள் தணிக்கைத் தடைகள் நிவர்த்தித்தல் குறித்த மாவட்ட அளவிலான உயர் மட்ட குழுவில் உள்ளாட்சி நிதித் தணிக்கை, மண்டல இணை இயக்குநர் ஒரு உறுப்பினர் ஆவார்

III. Regional Joint Director, Local Fund Audit is a Vice Chairman in High Level Committee constituted for settlement of audit objection in respect of Municipalities.
நகராட்சிகள் குறித்த தணிக்கைத் தடைகள் நிவர்த்தித்தலுக்கான மாவட்ட அளவிலான உயர் மட்ட குழுவில் உள்ளாட்சி நிதித் தணிக்கை, மண்டல இணை இயக்குநர் துணை தலைவர் ஆவார்.

(A) I, II and III are correct
I, II மற்றும் III சரி

(B) I and III are correct
I மற்றும் III சரி

(C) I and II are correct
I மற்றும் II சரி

(D) II and III are correct
II மற்றும் III சரி

34. If net income from a Municipality is 2 crore, find out contribution to Local Town Planning Authority.
ஒரு நகராட்சியின் நிகர வருமானம் ரூ. 2 கோடி எனில், உள்ளூர் திட்டக் குழுமத்திற்கான பங்குத் தொகை கணக்கிடுக.

(A) Rs. One lakh
ரூபாய் ஒரு லட்சம்

(B) Rs. Two lakhs
ரூபாய் இரண்டு லட்சம்

(C) Rs. Three lakhs
ரூபாய் மூன்று லட்சம்

(D) Rs. 50,000/–
ரூ. 50,000/–

35. Tamilnadu Panchayat Act 1994 have received assent of Governor of Tamilnadu on
தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 தமிழக ஆளுநரின் ஒப்புதல் பெற்ற நாள்?

(A) 21st March, 1994
1994 ஆம் ஆண்டு, மார்ச் 21 ஆம் நாள்

(B) 25th January, 1994
1994 ஆம் ஆண்டு, ஜனவரி 25 ஆம் நாள்

(C) 22nd April, 1994
1994 ஆம் ஆண்டு, ஏப்ரல் 22 ஆம் நாள்

(D) 21st April, 1994
1994 ஆம் ஆண்டு, ஏப்ரல் 21 ஆம் நாள்

36. If net income from a Town Panchayat located within the limit of CMDA is 2.40 crore, find out contribution to Local Town Planning Authority.
CMDA எல்லைக்குட்பட்ட ஒரு பேரூராட்சியின் நிகர வருமானம் ரூ. 2.40 கோடி எனில், உள்ளூர் திட்டக் குழுமத்திற்கான பங்குத் தொகை கணக்கிடுக.

(A) Rs. 1,20,000/–
ரூ. 1,20,000/–

(B) Rs. 2,40,000/–
ரூ. 2,40,000/–

(C) Rs. 60,000/–
ரூ. 60,000/–

(D) Rs. 2,20,000/–
ரூ. 2,20,000/–

37. Choose the right choice / Choices about delay in remittance of TDS deducted towards GST from a contractor or supplier.
சரக்கு மற்றும் சேவை வரி உரிய காலத்தில் செலுத்தப்படாத நிகழ்வுகளில் சரியான இணை/இணைகளைத் தேர்ந்தெடுக்க

1. As per GST Act 2017–section 122 (1) (V), Section 51(6) and Section 60(1), Rs. 10,000 or Amount not deducted as TDS or short deduction whichever is higher to be remitted.
GST Act 2017 – section 122 (1) (V), Section 51(6) and Section 60(1) ன் படி ரூ. 10,000/– (அல்லது) பிடிக்கத்தவறிய தொகை (அல்லது) குறைவாகப் பிடித்தத் தொகை (அல்லது) அரசுக்குச் செலுத்தாதத் தொகை இதில் எது அதிகமோ அதை தண்டத்தொகையாக செலுத்த வேண்டும்

2. Penalty to tune of 18% should be remitted back with said amount.
தண்டத்தொகையுடன் 18% வட்டி உடன் சேர்த்து செலுத்த வேண்டும்

3. Return vide GSTR 7A showing TDS should be filed within 5 days from filing of GSTR 1, failing which Rs. 100/- per day will be fined up to maximum of Rs. 5,000/-
GSTR-1 தாக்கல் செய்த 5 தினங்களுக்குள் ஒப்பந்ததாரருக்கு TDS பிடித்தச் சான்று GSTR-7A வில் வழங்க வேண்டும், இல்லையென்றால் தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 100/– வீதம் GSTR-7A வழங்கும் நாள் வரையில் அதிகபட்சமாக ரூ. 5,000/– வரை செலுத்த நேரிடும்

(A) I, II and III are correct
I, II மற்றும் III சரி

(B) I and III are correct
I மற்றும் III சரி

(C) I and II are correct
I மற்றும் II சரி

(D) II and III are correct
II மற்றும் III சரி

38. Vide Rules 191(84) of Agriculture Marketing Regulations, ———— % of Licencing fees and Cess to be remitted as contribution to Agriculture Marketing Board (Chennai).
தமிழ்நாடு விளைபொருட்கள் மார்கெட்டிங் ரெகுலேஷன் 191 துணை விதி 84–ன் படி ஒவ்வொரு மாவட்ட வேளாண்மை விற்பனைக்குழு வசூல் செய்யும் லைசன்ஸ் மற்றும் செஸ் கட்டணங்களில் ———— % பங்குத் தொகையினை மாநில வேளாண் விற்பனை வாரியத்திற்கு (சென்னை) செலுத்த வேண்டும்?

(A) 15%

(B) 1%

(C) 2%

(D) 10%

39. The Director may, by general or special order, delegate all or any of the powers to be exercised or functions to be performed by him under this Act or the rules made there under except the power under ———— section of Tamilnadu Local Fund Audit Act, 2014.
தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கைச் சட்டம் 2014 ன் பிரிவு ———— ன் படி இயக்குநர் பொது/சிறப்பு ஆணைகள் மூலம் அவரது அதிகாரங்களை சார்நிலை அலுவலர்களுக்கு நிபந்தனைகளுடனோ அல்லது நிபந்தனையின்றியோ பகிர்வு செய்து உத்திரவிடலாம்.

(A) Section 13
சட்டப்பிரிவு எண். 13

(B) Section 14
சட்டப்பிரிவு எண். 14

(C) Section 15
சட்டப்பிரிவு எண். 15

(D) Section 16
சட்டப்பிரிவு எண். 16

40. Choose the right choice / choices about constitution of organization.
நிறுவனங்களைப் பொறுத்தவரை சரியான இணை/இணைகளைத் தேர்ந்தெடுக்க

I. Local Library Authority constituted under the Tamil Nadu Public Libraries Act, 1948.
நூலக ஆணைக்குழு–தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948ன் படி அமைக்கப்பட்டது

II. Local Planning Authority constituted under the Tamil Nadu Town and Country Planning Act. 1971.
உள்ளூர் திட்டக் குழுமம்–தமிழ்நாடு நகர் உள்ளூர் திட்டக் குழுமச் சட்டம், 1971 ன் படி அமைக்கப்பட்டது.

III. Market committee constituted under the Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act, 1987.
மாவட்ட விற்பனைக்குழு–தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987–ன் படி அமைக்கப்பட்டது.

(A) I, II and III are correct
I, II மற்றும் III சரி

(B) II and III are correct
II மற்றும் III சரி

(C) I and II are correct
I மற்றும் II சரி

(D) I and III are correct
I மற்றும் III சரி

41. What is the amount of subscription deducted from monthly pension of a family pensioner of Panchayat Union towards medical reimbursement?
ஊராட்சி ஒன்றிய குடும்ப ஓய்வூதியதாரர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தில் மருத்துவச் செலவினை மீள் பெற்றுத்தருவதற்கான திட்டத்திற்கான சந்தா தொகை யாது?

(A) Rs. 100 per month
மாதாந்திரம் ரூ. 100

(B) Rs. 150 per month
மாதாந்திரம் ரூ. 150

(C) Rs. 80 per month
மாதாந்திரம் ரூ. 80

(D) Rs. 230 per month
மாதாந்திரம் ரூ. 230

42. An excecutive authority of an institution has to re-submit the accounts which was returned with remarks for further rectification and re-submission within ———— days from he receives.
திரும்பப் பெறப்பட்ட ஆண்டுக் கணக்குகளில் கண்டறியப்பட்ட குறைகளை சரி செய்து எத்தனை நாட்களுக்குள் மீளவும் தணிக்கை அலுவலகத்திற்கு நிர்வாக அதிகாரியால் திருப்பியளிக்க வேண்டும்?

(A) 10 days
10 நாட்கள்

(B) 15 days
15 நாட்கள்

(C) 25 days
25 நாட்கள்

(D) 30 days
30 நாட்கள்

43. Panchayats in Tamil Nadu have been classified as Town Panchayats and Village Panchayats according to their
தமிழ்நாட்டில் ஒரு பஞ்சாயத்தானது கிராம ஊராட்சியாகவோ அல்லது பேரூராட்சியாகவோ அதன் ———— ன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.

(A) Income
வருமானம்

(B) Population
மக்கள் தொகை

(C) Area
பகுதி

(D) Annual Income and Population
ஆண்டு வருமானம் மற்றும் மக்கள் தெகை

44. ―――――― is administrated by the extension of provisions in the District Municipalities Act 1920 as well as the Tamil Nadu Panchayats Act 1994
1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் 1994 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் ஆகிய இரண்டின் விதிகளினாலும் நிர்வகிக்கப்படும் நிறுவனம்

(A) Town Panchayats
பேரூராட்சிகள்

(B) Panchayats
ஊராட்சிகள்

(C) Municipalities
நகராட்சிகள்

(D) District Panchayats
மாவட்ட ஊராட்சிகள்

45. Section 172 of the Tamil Nadu Panchayats Act 1994 deals with
1994 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 172 வது விதி ―――――― ஐ குறிக்கிறது.

(A) GST
சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி)

(B) TN VAT
மதிப்பு கூட்டு வரி (வாட்)

(C) Levy of House Tax
வீட்டு வரி விதிப்பது

(D) Income Tax
வருமான வரி

46. The town Panchayats have been classified under ―――――― grades.
பேரூராட்சிகள் ―――――― வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(A) 4

(B) 6

(C) 2

(D) 5

47. The vouchers passed by the Town Panchayats are being sent to the audit office at
பேரூராட்சிகளின் செலவுச் சீட்டுகள் ―――――― தோறும் தணிக்கை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

(A) Every day
நாள் தோறும்

(B) Every week
வாரந்தோறும்

(C) Every month
மாதந்தோறும்

(D) Every year
ஆண்டுதோறும்

48. The monthly library cess collections less refund if any should be remitted to the local library authority by means of
வசூலிக்கப்பட்ட மாதாந்தர நூலக வரியின் ஏதேனும் திருப்பி செலுத்துதல் இருப்பின் அதுபோக எஞ்சிய நூலக வரியை ———————— மட்டுமே நூலகத்துறைக்கு செலுத்துதல் வேண்டும்.

(A) Cash only
பணமாக

(B) Account payee cheque only
கோடிட்ட காசோலையாக

(C) Demand draft only
கேட்பு வரைவோலையாக

(D) None of the above
ஏதுமில்லை

49. The period of Lapse of an unclaimed deposit is
கோரப்படாத வைப்புத் தொகைகள் காலாவதியாகும் கால அளவு

(A) one year
ஓராண்டு

(B) 2 years
இரண்டு ஆண்டுகள்

(C) three year
மூன்று ஆண்டுகள்

(D) 4 years
4 ஆண்டுகள்

50. The taxes and fees due to the Town Panchayats becomes time barred after expiry of ———————— years.
பேரூராட்சிகளுக்கான வரிகள் மற்றும் கட்டணங்கள் ———————— ஆண்டுகள் காலம் கடந்த பின்னர் அவை காலாவதியாகின்றன.

(A) Four years
நான்கு ஆண்டுகள்

(B) five years
ஐந்து ஆண்டுகள்

(C) 10 years
பத்து ஆண்டுகள்

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

51. Seigniorage fees are collected by the
கனிமவளக் கட்டணம் ———————— ஆல் வசூலிக்கப்படுகிறது.

(A) Government
அரசு

(B) Universities
பல்கலைக்கழகங்கள்

(C) Local bodies
உள்ளாட்சி நிறுவனங்கள்

(D) Railway Board
ரயில்வே வாரியம்

52. The Minimum General educational qualification of a bill collector of Town Panchayat is
பேரூராட்சியின் வரி வசூலருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச கல்வித் தகுதி

(A) Higher secondary pass
மேல்நிலை வகுப்பு தேர்ச்சி

(B) SSLC
எஸ்.எஸ்.எல்.சி

(C) Eighth class pass
எட்டாம் வகுப்பு தேர்ச்சி

(D) None of the above
மேற்கண்ட ஏதுமில்லை

53. The amount required to be remitted by a tenderer along with his tender indicating his willingness to implement the contract is called
வேலை செய்து முடிக்க விருப்பம் தெரிவிக்கும் விதமாக விலைப்புள்ளியுடன் சேர்த்து ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட வேண்டிய தொகை ———————— ஆகும்.

(A) Earnest money deposit
முன் வைப்பு தொகை

(B) Fixed deposit
நிலை வைப்பு

(C) Recurring deposit
தொடர் வைப்பு

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

54. Work of contruction as well as supply of Goods and Services are called as ———————— in respect of Tender Rules.
ஒப்பந்தப்புள்ளி சட்ட விதிகளின் படி கட்டுமான வேலை மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகளை பெறுதல் என்பது ———————— என அழைக்கப்படுகிறது.

(A) Tender
ஒப்பந்தப்புள்ளி

(B) Procurement
கொள்முதல்

(C) Works
வேலைகள்

(D) Contract
ஒப்பந்தம்

55. "Tender inviting authority may send notice inviting tenders to all possible tenderers directly" say whether this statement is ———————— as per tender rules.
"ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விடும் அலுவலர் அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் நேரடியாக அழைப்புகளை அனுப்பலாம்" இந்த குறிப்பு சரியா என கூறுக.

(A) Quasi correct
பாதி சரி

(B) Not correct
சரியல்ல

(C) Correct
சரி

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

56. ————— are contained in the Tender documents.
ஒப்பந்தப் புள்ளி ஆவணங்களில் ————— குறிப்பிடப்பட்டிருக்கும்.

(A) Administrative sanction
நிர்வாக அனுமதி

(B) Technical sanction
தொழில்நுட்ப அனுமதி

(C) Completion report
முடிவறிக்கை

(D) Technical specifications
தொழில்நுட்பக் குறிப்புகள்

57. Percentage of withheld amounts do not exceed ————— of the total value of contract.
நிறுத்தி வைப்பு தொகையானது ஒப்பந்த மதிப்பில் ————— அளவை மிகக் கூடாது.

(A) 5%

(B) 2%

(C) 10%

(D) 20%

58. A security deposit should be taken from the successful tenderer at the rate of not exceeding ————— of the value of the work orders.
வேலை ஒதுக்கீட்டு ஆணை வழங்கப் பெறுகிற ஒப்பந்ததாரரிடமிருந்து வேலையின் மதிப்பில் ————— அளவுக்கு மிகாத அளவில் பிணை வைப்புத் தொகை பெறப்பட வேண்டும்.

(A) 2%

(B) 5%

(C) 10%

(D) 20%

59. Mobilization advances may be paid to the contractor in cases of value exceeding Rs.
ரூ. ————— க்கும் மேற்கட்ட வேலைகளின் ஒப்பந்ததாரக்களுக்கு முன்கூட்டிய முன்பணம் வழங்கலாம்.

(A) One crore
ஒரு கோடி

(B) Ten crore
பத்து கோடி

(C) Hundred crores
நூறு கோடி

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

60. Tender documents may also be made available ———— at such websides as may be indicated by the Tender inviting authority.
ஒப்பந்த ஆவணங்களை அழைக்கும் அலுவலர் அழைப்பு குறித்த விவரங்களை ரூ. ———— செலுத்தும் நிகழ்வுகளில் அது குறித்த வலைதளங்களில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

(A) at free of cost
இலவசமாக

(B) at remittance of Rs. 1,000/–
ரூ. 1000/– செலுத்தும்

(C) at remittance of Rs. 100/–
ரூ. 100/– செலுத்தும்

(D) at remittance of Rs. 10/–
ரூ. 10/– செலுத்தும்

61. The constitution of a tender scrutiny committee in a/an
ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வு குழு அமைத்தல் என்பது

(A) Obligatory
விருப்பம் சார்ந்தது

(B) Mandatory
கட்டாயமானது

(C) Both of the above
மேற்கண்ட இரண்டும்

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

62. Section 113 and 122 of the Tamil Nadu Town and Country Planning Act 1971 deal with power of making rules in respect of
1971 ஆம் ஆண்டின் நகர் ஊரமைப்பு சட்டத்தின் விதி எண். 113 மற்றும் 122 ஆகியவை ———— குறித்து அமைந்துள்ளன.

(A) Regulation of unapproved plots
அங்கீகரிக்கப்படாத மனைகளை முறைப்படுத்துதல்

(B) Regularisation of unapproved building
அங்கீகரிக்கப்படாத கட்டடங்களை முறைப்படுத்துதல்

(C) Issue of patta
பட்டா வழங்குதல்

(D) None of these
மேற்கண்ட எதுவுமில்லை

63. The rules for Regularisation of unapproved plots and layouts was enacted during the year
அங்கீகரிக்கப்படாத மனைகளை முறைப்படுத்துதல் குறித்த விதிகள் ―――――――― ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.

(A) 2015
(B) 2017
(C) 2020
(D) 2019

64. Name of the administrative department in secretariate for the Department of town and country planning is
நகர் ஊரமைப்பு துறைக்கான தலைமைச் செயலக நிர்வாகத் துறையின் பெயர் ―――――――― ஆகும்.

(A) Finance department
நிதித்துறை
(B) P and AR dept.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை
(C) Law dept.
சட்டத்துறை
(D) Housing and Urban Development Dept.
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

65. The amount collected towards the cost of providing amenities and infrastructure facilities in urban and rural areas by local authorities is called
நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளால் அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்கித் தருகிற நோக்கத்திற்காக வசூலிக்கப்படுகிற கட்டணம் ―――――――― ஆகும்.

(A) development charge
வளர்ச்சிக் கட்டணம்
(B) demolition fee
தகர்ப்பு கட்டணம்
(C) regularisation charge
முறைப்படுத்துதல் கட்டணம்
(D) none of the above
மேற்கண்ட எதுவுமில்லை

66. Guideline value for the purpose of registeration of land is fixed by
பத்திரப்பதிவு செய்வதற்கான வழிகாட்டி மதிப்பு ———————— துறையில் நிர்ணயிக்கப்படுகிறது.

(A) Revenue Department
வருவாய் துறை

(B) Finance department
நிதித்துறை

(C) Registration department
பத்திரப்பதிவு துறை

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

67. Division of Land into plots exceeding eight in numbers in CMDA areas is called
சி.எம்.டி.ஏ. பகுதியில் 8 எண்ணிக்கைக்கும் அதிகமாக நிலப்பிரிப்புகளை ———————— என்கிறோம்.

(A) Sub division
உட்பிரிவு

(B) Lay out
மனைப்பிரிவு

(C) Division of Land
மனை பகிர்வு

(D) None of these
மேற்கண்ட ஏதுமில்லை

68. "Plot or Layout in part or whole in Government Poramboke Land shall be eligible for regularisation". This statement is
பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ அரசு புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ள மனை அல்லது மனைப்பிரிவை முறைப்படுத்த முடியும். இக்கூற்று ———————— ஆகும்.

(A) 100% wrong
100% தவறு

(B) 50% wrong
50% தவறு

(C) 100% correct
100% சரி

(D) 50% correct
50% சரி

69. For regularisation of Layout, Open Reservation Charge (OSR) shall be collected for ———————— % of the layout area as per guidelines value.
மனைப்பிரிவு முறைப்படுத்துதலின் போது மனைப்பிரிவின் வழிகாட்டி மதிப்பில் ————————% நில மதிப்பு திறந்த வெளி கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

(A) 20%

(B) 25%

(C) 10%

(D) 50%

70. For regularisation of plot in a sub division the open space reservation area is fixed by
மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதலின் போது திறந்த வெளி நில அளவு ———————— ஆல் நிர்ணயிக்கப்படுகிறது.

(A) Control regulations
கட்டுப்பாட்டு விதிகள்

(B) Development regulations
வளர்ச்சி விதிகள்

(C) Building regulations
சட்ட விதிகள்

(D) None of these
மேற்கண்ட எதுவுமில்லை

71. Plot/Layout Regularisation charges shall be remitted to ———————— account.
வீட்டு மனை/மனைப்பிரிவு கட்டணங்கள் யாவும் ———————— கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

(A) Local bodies
உள்ளாட்சி அமைப்புகளின்

(B) Municipalities
நகராட்சிகளின்

(C) Government
அரசுக்

(D) Corporations
மாநகராட்சிகள்

72. Development charges collected for the purpose of regularization of a plot/layout shall be remitted to the account of
மனை/மனைப்பிரிவு முறைப்படுத்துதலின் போது வசூலிக்கப்படுகிற வளர்ச்சிக் கட்டணங்களை ———————— ன் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.

(A) CMDA
சிஎம்டிஏ

(B) DTP
டிடிபி

(C) DTCP
டிடிசிபி

(D) Local bodies
உள்ளாட்சி நிறுவனங்கள்

73. The president of purchase committee for the purpose of purchase of materials for General purpose and water supply is in respect of municipalities is
நகராட்சிகளை பொறுத்தவரை பொது நோக்கம் மற்றும் குடிநீர் வழங்கல்கள் குறித்த பொருட்களை கொள்முதல் செய்ய அமைக்கப்படுகிற கொள்முதல் குழுவின் தலைவர் ———————— ஆவார்.

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Municipal commission
நகராட்சி ஆணையாளர்

(C) Municipal Engineer
நகராட்சி பொறியாளர்

(D) RDMA
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் (ஆர்டிஎம்ஏ)

74. How many pants and shirts are issued to municipal drivers every year?
நகராட்சி ஓட்டுனர்களுக்கு ஆண்டுதோறும் எத்தனை பேண்ட் மற்றும் சட்டைகள் வழங்கப்படுகின்றன?

(A) 3
(B) 4
(C) 5
(D) 2

75. Local bodies ———————— from the payment of security deposit for supply of Electricity made by Electricity Board for any purpose.
உள்ளாட்சி நிறுவனங்கள் தங்களால் பயன்படுத்தப்படுகிற மின்சார அளவுக்கு எந்த வித பிணை வைப்பு தொகையையும் மின்சார வாரியத்திற்கு செலுத்துவதிலிருந்து

(A) Not exempted
விலக்கு அளிக்கப்படுவதில்லை

(B) Partly exempted
பகுதி விலக்கு அளிக்கப்படுகிறது

(C) May be exempted
விலக்கு அளிக்கப்படலாம்

(D) None of these
இவற்றில் எதுவுமில்லை

76. In order to facilitate prompt issue of receipts to the parties making payments of Miscellaneous dues into the Municipal treasuries ———— system has been introduced.
நகராட்சிகளால் வசூலிக்கப்படுகிற இதர நிலுவைகளை செலுத்துபவர்களுக்கு முறையாக ரசீது கொடுக்கும் நோக்கத்திற்காக ———— முறை நகராட்சிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.

(A) Single challan system
ஒரு இதழ் ரசீது

(B) Duplicate challan system
இரு இதழ் ரசீது

(C) Triplicate challan system
மூவிதழ் ரசீது

(D) None of these
இவற்றில் ஏதுமில்லை

77. Name of the register maintained in the municipal office to watch the realization of income from properties belonging to the municipalities
நகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களிலிருந்து ஈட்டக் கூடிய வருவாயை கண்காணிக்க பயன்படும் பதிவேடு ———— ஆகும்.

(A) Maximum demand register
அதிகபட்ச கேட்பு பதிவேடு

(B) Miscellaneous demand register
பல்வகை கேட்பு பதிவேடு

(C) Minimum Demand register
குறைந்த பட்ச கேட்பு பதிவேடு

(D) None of these
மேற்கண்ட எதுவுமில்லை

78. Trade License fee in a municipality should be collected ———— a license is granted or renewed.
நகராட்சியில் தொழில் உரிமக் கட்டணமானது உரிமம் அளிப்பதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு ———— வசூலிக்கப்பட வேண்டும்.

(A) Before
முன்னதாக

(B) After
பின்னர்

(C) During
உரிமம் வழங்கும் போதே

(D) None of these
மேற்கண்ட எதுவுமில்லை

79. Lease of shops, markets vested with municipalities are to be let out for a period ———— years from the financial year 2009-10.

2009–10 ஆம் நிதியாண்டிலிருந்து நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் ———— ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடலாம்.

(A) 5 Years
5 ஆண்டுகள்

(B) 4 Years
4 ஆண்டுகள்

(C) 3 Years
3 ஆண்டுகள்

(D) 10 Years
10 ஆண்டுகள்

80. Taxation Appeals Committee is a
வரி மேல்முறையீட்டு குழு ஒரு

(A) Nominal Committee
பெயரளவு குழு

(B) Obligatory Committee
விருப்பக் குழு

(C) Directive Committee
வழிகாட்டுதல் குழு

(D) Statutory Committee
சட்டபூர்வமான குழு

81. As per the provisions of Tamil Nadu Local Fund Audit Act 2016 the word auditor denotes

2016 ஆம் ஆண்டின் தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை சட்ட விதிகளின் படி தணிக்கையாளர் என்ற வார்த்தை ———— யை குறிக்கிறது.

(A) the finance secretary
அரசின் நிதித்துறை செயலாளர்

(B) the director of Government audit
அரசு தணிக்கைத் துறை இயக்குனர்

(C) the accountant general
மாநிலக் கணக்காயர்

(D) the director of local fund audit
உள்ளாட்சி நிதி தணிக்கை துறை இயக்குனர்

82. The manner of audit applicable to Greater Chennai Corporation is
பெருநகர சென்னை மாநகராட்சியின் பின்பட வேண்டிய தணிக்கை முறை ———————— ஆகும்.

(A) post audit and cent percent audit
பின் தணிக்கை மற்றும் நூறு விழுக்காடு தணிக்கை

(B) concurrent audit and immediate post audit
உடனிகழ் தணிக்கை மற்றும் உடன்பின் தணிக்கை

(C) pre audit and cent percent audit
முன் தணிக்கை மற்றும் நூறு விழுக்காடு தணிக்கை

(D) None of these
மேற்கண்ட எதுவுமில்லை

83. The manner of audit on the accounts or records of local authority related to retiring officials is called
ஓய்வு பெறுகிற அலுவலர் தொடர்கான கணக்குகள்/ஆவணங்களை தணிக்கை செய்யும் முறை ———————— எனப்படும்.

(A) Urgent audit
அவசர தணிக்கை

(B) Official audit
அலுவலர் தணிக்கை

(C) Transaction audit
நடவடிக்கைகள் தணிக்கை

(D) None of these
மேற்கண்ட எதுவுமில்லை

84. The manner of audit to ascertain whether the desired results or benefits were achieved in utilizing the grants or loans sanctioned for specified purpose is called
ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகிற மானியம் மற்றும் கடன்களின் மூலம் விரும்பப்படுகிற நோக்கம் எட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்யும் தணிக்கை முறை ———————— எனப்படும்.

(A) Grants audit
மானியத் தணிக்கை

(B) Achievement audit
சாதனை தணிக்கை

(C) Special audit
சிறப்பு தணிக்கை

(D) Performance audit
செயல்பாடுகள் தணிக்கை

85. For the purpose of non production of Annual Accounts show cause notice under sub-section 2 of section 7 of TNLF audit rules 2016 shall be issued by an officer not below the rank of ———— to executive authority.
ஆண்டுக்கணக்குகள் தணிக்கைக்கு அளிக்கப்படாமைக்காக த.நா. உள்ளாட்சி நிதி தணிக்கை சட்டவிதிகள் 2016 ன் விதி எண். 7 மற்றும் உப விதி 2 ன் படி ———— பதவிக்கு குறையாத அலுவலர் உள்ளாட்சி நிறுவன செயல் அலுவலருக்கு காரணம் கேட்கும் அறிவிப்பினை வழங்கலாம்.

(A) Assistant director
உதவி இயக்குனர்

(B) Inspector
ஆய்வாளர்

(C) Joint Director
இணை இயக்குனர்

(D) Deputy Director
துணை இயக்குனர்

86. The validity period of building planning permission has been amended from 30.3.2017
30.3.2017 முதல் திருத்தியமைக்கப்பட்ட கட்டி அனுமதி காலம் எத்தனை ஆண்டுகள்

(A) 5 years
5 ஆண்டுகள்

(B) 4 years
4 ஆண்டுகள்

(C) 3 years
3 ஆண்டுகள்

(D) 7 years
7 ஆண்டுகள்

87. Tamil Nadu Local fund act in which year is enacted
எந்த ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது

(A) 2013

(B) 2014

(C) 2016

(D) 2015

88. The number of tubelights replacement per year
ஒரு ஆண்டில் உள்ளாட்சி நிறுவனங்களில் மாற்றம் செய்ய அனுமதிக்கப்படும் குழல் விளக்குகள் எண்ணிக்கை எவ்வளவு

(A) 2 Nos
2 எண்கள்

(B) 5 Nos
5 எண்கள்

(C) 4 Nos
4 எண்கள்

(D) 3 Nos
3 எண்கள்

89. As per GO Ms. 206 Fin (salaries) dt. 04.07.2017 how much amount of articles purchased without inviting quotation
அரசாணை எண். 206 /நிதி (ஊதியம்) நாள் 04.07.2017 ன் படி பொருட்கள் விலைப்புள்ளி இல்லாமல் நேரடியாக கொள்முதல் செய்ய உச்சவரம்பு

(A) Rs. 5000.0200
ரூ. 5000.0200

(B) Rs. 1000.00
ரூ. 1000.00

(C) Rs. 500.00
ரூ. 500.00

(D) Rs. 10000.00
ரூ. 10000.00

90. How many percentage of GST to be deducted from the work bill of the civil contractor?
சிவில் வேலை செய்யும் ஒப்பந்தகாரர் பட்டியலில் பிடித்தம் செய்ய வேண்டிய ஜி.எஸ்.டி பிடித்த விகிதம் எவ்வளவு?

(A) 2 %
2 சதவீதம்

(B) 12 %
12 சதவீதம்

(C) 4 %
4 சதவீதம்

(D) 6 %
6 சதவீதம்

91. Tamil Nadu tender transparency rules 2000 came into force on?
தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000 நடைமுறைக்கு வந்த நாள் எது?

(A) 1.11.2000
(B) 1.10.2000
(C) 1.06.2000
(D) 1.09.2000

92. During the audit how many times audit verifying the cash balance?
தணிக்கை நிறுவனத்தில் தணிக்கையாளரால் தணிக்கையின்போது எத்தனை முறை ரொக்கக் கையிருப்பு சரிபார்க்கலாம்?

(A) 2 times
2 முறைகள்

(B) 3 times
3 முறைகள்

(C) 1 time
1 முறை

(D) 4 times
4 முறைகள்

93. How many types of journal vouchers in the Municipality?
நகராட்சியில் பேணப்படும் கணக்குகளில் உள்ள நடவடிக்கை குறிப்புச் சீட்டுகள் எத்தனை?

(A) 2
(B) 3
(C) 5
(D) 4

94. Annual Income of town panchayat is below 50 lakhs. Classification of Panchayat is termed as
பேரூராட்சியின் ஆண்டு வருமானம் 50 லட்சத்திற்குள் இருந்தால் அதன் வகையின் பெயர்

(A) Grade I
நிலை–I
(B) Grade II
நிலை–II
(C) Special Grade
சிறப்பு நிலை
(D) Selection Grade
தேர்வு நிலை

95. What is the rate of sale price of tender schedule for works above 5 lakhs but below 10 lakhs
ரூ. 5 லட்சத்திற்கு மேல் ரூ. 10 லட்சம் வரையிலான வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் விலை

(A) Rs. 500 + 18% GST
ரூ. 500 + 18 ஜிஎஸ்டி
(B) Rs. 1500 + 18% GST
ரூ. 1500 + 18 ஜிஎஸ்டி
(C) Rs. 150 + 18% GST
ரூ. 150 + 18 ஜிஎஸ்டி
(D) Rs. 750 + 18% GST
ரூ. 750 + 18 ஜிஎஸ்டி

96. The estimates for water supply works are prepared based on the data available in
குடிநீர் வேலைகளுக்கான மதிப்பீடுகள் எந்த விலைவிகிதத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது?

(A) Highway manual
நெடுஞ்சாலை நடைமுறை நூல்
(B) TNEB schedule of rate
மின்சார வாரிய விலைவிகிதம்
(C) PWD schedule of rate
பொதுப் பணித்துறை விலைவிகிதம்
(D) TWAD schedule of rate
குடிநீர் வடிகால் வாரிய விலைவிகிதம்

97. As per GO No. 46 Rural Development dept. dt. 26.03.2015 the latrine construction in IHHL scheme the grand allowed is
அரசாணை நிலை எண். 46 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள் 26.03.2015 இன்படி தனிநபர் இல்ல கழிவறை திட்டத்தில் (IHHL) அனுமதிக்கப்படும் மான்யம்

(A) 10000
(B) 8000
(C) 12000
(D) 14000

98. The fuel quantity for block development officer (B.P) vehicle is to be met from General fund is
ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சி பிரிவு வட்டார வளர்ச்சி அலுவலரின் வாகனத்திற்கு பொது நிதியிலிருந்து அனுமதிக்கப்படும் எரிபொருள் அளவு

(A) 150 litres
150 லிட்டர்
(B) 100 litres
100 லிட்டர்
(C) 200 litres
200 லிட்டர்
(D) 175 litres
175 லிட்டர்

99. Annual income of municipality is below Rs. 6 Crores. Classification of municipality is
நகராட்சியின் ஆண்டு வருமானம் 6 கோடிக்குள் இருந்தால் அதன் வகையின் பெயர் என்ன?

(A) Selection Grade
தேர்வு நிலை
(B) Grade II
நிலை II
(C) Special Grade
சிறப்பு நிலை
(D) Grade I
நிலை I

100. Which is the financial power of the District Collector in respect of theft and fire in Panchayat Union?
ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெறும் திருட்டு மற்றும் தீவிபத்தினால் ஏற்பட்ட இழப்பினை தள்ளுபடி செய்ய மாவட்ட ஆட்சியருக்கு அனுமதிக்கப்பட்ட தொகை

(A) Rs. 1000
ரூ. 1000
(B) Rs. 5000
ரூ. 5000
(C) Rs. 10,000
ரூ. 10,000
(D) Rs. 25,000
ரூ. 25,000